# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 005/பேரூ/2024**
**நாள் : 30.09.2024**

திரு. கோ. பரசுராமன்,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம். – எதிர் மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், மேட்டுத்தண்டலம், பாரதி நகர், காந்தி தெரு, ப.எண். 2/226ஏ, பு. எண். 3/99 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கோ. பரசுராமன் என்பவரின் 05.02.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2024 அன்று பெறப்பட்டு, 005/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், மேட்டுத்தண்டலம், பாரதி நகர், காந்தி தெரு, ப.எண். 2/226ஏ, பு. எண். 3/99 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கோ. பரசுராமன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"காஞ்சிபுரம் மண்டலம், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் தூய்மை பணியாளர் பணியிடத்தில் பணிபுரிந்து வரும் திருமதி. ர. ராஜாம்பாள் மற்றும் திருமதி. வ. தேவி ஆகியோர் தினக்கூலி பணியாளர்களாக பணிபுரிந்து முறையே கடந்த 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இவர்களை விதிகளை பின்பற்றாமல் தேர்வு செய்யப்பட்டு, அப்போதைய துப்புரவு பணியாளர் பணியிடத்தில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் இவர்கள் நியமனம் செய்யப்பட்ட உண்மை பணியிடமான தூய்மைப் பணி செய்யாமல், அலுவலகத்தில் இருக்கை கொடுத்து நாளேடு எழுதுதல், பல்வகைப்பட்ட கேட்பு கோப்பு எழுதுதல், வைப்புத் தொகை பதிவேடு எழுதுதல், ஒப்பந்ததாரர் பதிவேடு, கட்டட உரிமம் கோப்புகள் கையாளுதல், பெயர் மாற்ற கோப்புகள் கையாளுதல், பகிர்மான பதிவேடு எழுதுதல் போன்ற ஒரு பேரூராட்சியின் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களான தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர், பதிவுரு எழுத்தர் மற்றும் வரித்தண்டலர் செய்ய வேண்டிய பணிகளை இவர்களே செய்கின்றனர்.

இவர்கள் இருவரும், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் உள்ள பிற 17 தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணி செய்ய வருகை புரியும் காலை 6 மணிக்கு வருகை புரியாமலும், சீருடை அணியாமலும், காலை நேரத்தில் வருகை பதிவேட்டிற்கு பதிவு செய்யாமலும் உள்ளனர். ஆனால் அலுவலக நேரமான காலை 10.00 மணிக்கு இவர்கள் தனியாக வந்து வருகை பதிவேட்டில் கையொப்பம் இட்டு ஊதியம் பெற்று வருகின்றனர்.

பேரூராட்சி துறையில் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் (தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர்) செய்யவேண்டிய பணிகளை அரசு நிலையாக்கப்படாத (Non provincialised) பணியிடத்தில் பணிபுரிந்து வரும் தூய்மை பணிக்கு நியமனம் செய்யப்பட்ட இப்பணியாளர்களை வைத்து செய்ததால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிகழ்வுகளில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பேரூராட்சி பொது நிதிக்கு பல்வேறு நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக சமீபத்தில் பேரூராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டியில் வருடாந்திர ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் தினசரி வசூல் பணத்தினை வங்கியில் இருசால் பணி செய்யும் தூய்மைப் பணியாளர் திருமதி வ. தேவி என்பவர் கையாடல் செய்து பல இலட்சம் ரூபாய் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார். இது போன்று பல நிகழ்வுகளில் இவர்கள் இருவராலும் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், பேரூராட்சியின் அனைத்து கோப்புகளையும் இவர்களே தன்வசம் வைத்துள்ளதால் இவர்களுக்கு ஆகாத செயல் அலுவலர் / பிற அலுவலர்களின் பணிக்காலத்திற்கான தணிக்கையின்போது கோப்புகளை காணாமல் செய்துவிட்டு தணிக்கை தடை எழுவதற்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறார்கள்.

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வரும் திருமதி. ர. ராஜாம்பாள் மற்றும் திருமதி. வ. தேவி ஆகியோருக்கு அலுவலகத்தில் இருக்கை கொடுத்து, எழுத்துப் பணிகள் செய்ய அனுமதித்து அதன் மூலம் முன்பணம் பதிவேடு, டெபாசிட் பதிவேடு, நாளேடு எழுதுதல், செலவுச் சீட்டுகள் தயார் செய்தல், கட்டட உரிம கோப்புகள் எழுதுதல் போன்ற அரசு நிலையாக்கப்பட்ட பணியிடத்தில் பணிபுரியும் தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் ஆகியோர் மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய பணிகளை தூய்மைப் பணிக்கு நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் மேற்கொள்வதால் தோராயமாக ஊதியம் இருவருக்கும் மாதம் ரூ. 80,000/– வீதம் இதுவரை பல இலட்சம் ரூபாய் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இவர்கள் 15 ஆண்டுகளாக அதாவது 2007 ஆம் ஆண்டு முதல் நாளது வரை பணிபுரிவதால் பேரூராட்சிக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், பேரூராட்சி துறையில் உள்ள ஒரு சில பேரூராட்சிகளில் துப்புரவு பணியாளர்களை அலுவலக எழுத்துப் பணிகள் மேற்கொள்ள பயன்படுத்துவது குறித்து பல்வேறு புகார்கள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு சென்றவண்ணம் இருந்த காரணத்தினால், பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது 05.07.2011 நாளிட்ட சுற்றறிக்கையில் கீழ்க்கண்ட விவரப்படி பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மண்டல உதவி இயக்குநர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1. துப்புரவு பணியாளர்களை அவசர நிமித்தமாக மாற்றுப்பணிக்கு பயன்படுத்தும் அவசியம் ஏற்படும்போது தொடர்ச்சியாக ஒரு நபரை மட்டும் பயன்படுத்தாமல் பணி மூப்பு அடிப்படையில் சுழற்சி முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. மின் பராமரிப்பு போன்ற இன்னலுக்குட்பட்ட தொழில்நுட்பப் பணிகளுக்கு எக்காரணம் கொண்டும் துப்புரவு பணியாளர்களை பயன்படுத்தக்கூடாது.
3. துப்புரவு பணிகளுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை எக்காரணம் கொண்டும் அலுவலகத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது.
4. துப்புரவு பணியாளர்களை வேலைக்கு அனுப்புவதில் வேலை பாகுபாடு மற்றும் சாதி ரீதியாக பாகுபாடு பார்த்தல் கூடாது.
5. சீருடை அணிந்து வந்தால் மட்டுமே துப்புரவுப் பணிக்கு அனுமதித்திடல் வேண்டும்.
6. அதிகாலை மற்றும் மதியம் ஆகிய இரண்டு நேரங்களிலும் வருகைப் பதிவேடு எடுத்தல் வேண்டும். இதில் துப்புரவு பணியாளர்கள் அனைவரும் நேரில் ஆஜராகி வருகைப் பதிவு அளித்தல் வேண்டும்.
7. செயல் அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் அன்றாடம் அளிக்கப்படும் அறிவுரைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும்.
8. துப்புரவு பணியாளர் பணியிடத்தில் பணியமர்த்தப்பட்ட எந்த நபரையும் கட்டட அனுமதி வழங்கல், மனைப்பிரிவு அனுமதி வழங்குதல் மற்றும் சொத்து வரி பெயர் மாற்றம் செயதல், குடிநீர் இணைப்பு வழங்குதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தக்கூடாது.
9. பணியாளர்கள் எந்தப் பணிக்கென நியமனம் செய்யப்படுகிறார்களோ அவற்றிற்கு மட்டும் ஈடுபடுதலை உறுதி செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி விதிமுறைகளை கடுமையாக பின்பற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, மேற்படி சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றதும் துப்புரவு பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு மாற்றுப் பணியில் அலுவலகத்தில் உள்ள நபர்களை உடனடியாக அனுப்பி வைத்து செயல் அலுவலர்களிடம் சான்று பெற்று தொகுப்பறிக்கை சமர்ப்பித்திட அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களையும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இச்சுற்றறிக்கையினை பின்பற்றாத செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு அரசு அலுவலகத்தில் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடத்தில் பணிபுரிந்து வரும் அரசுப் பணியாளர் மூன்றாண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் நிகழ்வுகளில் அவர்களை பணிமாற்றம் செய்ய அரசு பணியாளர் நன்னடத்தை விதிகளில் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இதன் பேரில் பேரூராட்சிகளில் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரிந்து வரும், தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் ஆகியோர் மூன்றாண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்தவர்களை வேறு பேரூராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் செய்யும், நாளேடு எழுதுதல், வைப்புத் தொகை

பதிவேடு, ஒப்பந்ததாரர் பதிவேடு, கட்டட உரிமக் கோப்புகள், பல்வகைப்பட்ட கேட்புகள் பதிவேடு, வருமான வரி பிடித்தம் பதிவேடு, செலவுச்சீட்டுகள் முக்கியமாக தினசரி வசூல் தொகை கையாளுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் இரண்டு தூய்மைப் பணியாளர்களை இதுநாள் வரை 15 ஆண்டுகளாக ஒரே பேரூராட்சியில் பணிபுரிய அனுமதித்தது விதிகளுக்கு முரணானதாகும்.

மேலும், மேற்படி பொருள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சி பொது தகவல் அலுவலரை கோரப்பட்டதில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 961/2022, நாள் 19.10.2022ன் படி கீழ்க்காணும் தகவல் வழங்கியுள்ளார்.

"திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் தூய்மைப் பணியாளர்களாக பணிபுரிந்து வரும் திருமதி. ராஜாம்பாள் மற்றும் திருமதி. தேவி ஆகியோரை அலுவலக எழுத்து பணிக்கு ஈடுபடுத்திக்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் அனுமதி ஏதும் அளிக்கப்படவில்லை. மேலும், பெரும்பாலான பேரூராட்சிகளில் பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் பணிச்சுமை காரணமாக எழுத படிக்க தெரிந்த பணியாளர்களை கொண்டு அலுவலக பணிக்கு ஈடுபடுத்துவதை போல் இப்பேரூராட்சியில் மேற்படி பணியாளர்களை கொண்டு அலுவலகத்தில் எழுத்து பணிக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்பதை தகவலாக அளிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது".

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் மொத்தம் 21 தூய்மை பணியாளர் பணியிடங்களில் தற்போது பணிபுரிந்து வரும் 19 பணியாளர்களில் 15 நபர்கள் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள், 1 நபர் பிற்படுத்தப்பட்டவர், மீதமுள்ள 3 நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில், இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள 2 பெண் பணியாளர்களை வேண்டுமென்றே துப்புரவு பணியாளர் வேலைக்கு அனுப்புவதில் வேலை பாகுபாடு மற்றும் சாதி ரீதியாக பாகுபாடு வைத்து, தனி நபர் சுயநலத்திற்காகவும், மேற்படி பேரூராட்சிகளின் ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் குறிப்பாணை மற்றும் சுற்றறிக்கைகள் பின்பற்றாமல், குறிப்பாணை மற்றும் சுற்றறிக்கைக்கு எதிராக அலுவலகத்தில் இருக்கை கொடுத்து எழுத்துப் பணிக்கு அனுமதித்தது உண்மை என செயல் அலுவலரே உறுதி செய்துள்ளார்.

எனவே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் தூய்மைப் பணிக்கு நியமனம் செய்யப்பட்டு அரசு செலவில் சீருடை பெற்றுக் கொண்டு, சீருடை அணிந்து தனக்கான தூய்மைப் பணிக்கு செல்லாமல் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு அரசியல் செய்யும் தூய்மைப் பணியாளர்களான திருமதி ர. ராஜாம்பாள் மற்றும் திருமதி வ. தேவி ஆகியோர் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தூய்மைப் பணியாளர்களை பேரூராட்சிகளின் ஆணையர் குறிப்பாணை மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முரணாக அலுவலக எழுத்து பணிக்கு அனுமதித்தமைக்கும், இதன் காரணமாக பேரூராட்சி நிதி சுமார் ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி)க்கு மேல் தேவையற்ற செலவினம் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளதாலும், பேரூராட்சி செயல் அலுவலர் ஒரு பொதுப் பணியாளர் என்பதாலும் இவர் தன் பதவியை தனிநபர் லாபம் அடையும் வகையில் தனி நபர்கள் இருவருக்கு சாதகமாக அரசு பணியை பயன்படுத்தியுள்ளதால் உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் முறைமன்ற நடுவர் சட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கை மேற்கொள்ள பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள், தனது ஆளுமைக்குள் உள்ள பேரூராட்சிகளில் நடைபெறும் விதி மீறல்களை

கண்காணிக்கும் அலுவலர் என்பதாலும், பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் குறிப்பாணை மற்றும் சுற்றறிக்கைக்கு முரணாக எழுத்துப் பணிக்கு அனுமதித்த இரண்டு தூய்மைப் பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க செயல் அலுவலருக்கு அறிவுரை வழங்க தவறியமைக்கும் மேற்படி உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் முறைமன்ற நடுவர் சட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தொவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 09.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி நிர்வாகத்தில் உள்ள பணியிடங்கள் (Establishments) தலைமை எழுத்தர்–1, துப்புரவு ஆய்வாளர்–1, துப்புரவு மேற்பார்வையாளர் – 2 , இளநிலை உதவியாளர்–2, வரித்தண்டலர்–3, பதிவுரு எழுத்தர் – 1 மற்றும் தூய்மை பணியாளர்கள் –21 ஆகியன நிரந்தர பணியிடங்களாக உள்ளது. தற்போது தலைமை எழுத்தர்–1, இளநிலை உதவியாளர்–2, வரித்தண்டலர்–2, ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளன. காலிப்பணியிடங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

மேற்படி பணிகள் செவ்வனே, எவ்வித சுனக்கமுமின்றி காலதாமதம் ஏற்படாமல் பணியாற்ற திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியின் பணிக்குழு (ESTABLISHMENT) பணியாளர்கள் போதுமானதாக இல்லை, மேலும், பணியிடங்கள் திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில் தோற்றுவிக்க கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

புகாரில் தெரிவித்துள்ள இரு பணியாளர்கள், திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில் இளநிலை உதவியாளர் மற்றும் வரித்தண்டலர் பணியிடங்கள் காலியாக உள்ள காலங்களில் பணியிலிருக்கும் இளநிலை உதவியாளர் மற்றும் வரித்தண்டலர்களுக்கு நிர்வாகப் பணிகளில் கோப்புகளை தைப்பதற்கும், அடுக்கி வைக்கவும், அவர்கள் பணிக்கு உதவிகரமாக இருக்க செயல் அலுவலரின் உத்திரவின் பேரில் அவ்வப்போது, பணிபுரிந்து வருகின்றனர்.

புகார்தாரர் தெரிவித்துள்ள திருமதி. தேவி மற்றும் திருமதி. இராஜாம்பாள் ஆகிய இரு தூய்மைப் பணியாளர்களும் காலை 6.00 மணிக்கு பணிக்கு வந்து தூய்மைப் பணி முடிந்த பிறகு அலுவலகத்தில் நிர்வாக பணியிடங்கள் காலியாக உள்ளபடியால் கோப்புகள் தைத்தல், அடுக்கி வைத்தல், சுத்த நகல்கள் எடுத்தல் ஆகிய பணிகள் பகுதி நேரமாக அலுவலக பணி செய்து வருகின்றார்கள்.

நாளேடு பதிவேடுகள் மற்றும் வசூல் பணி செய்யும் பணியினை கையாளவில்லை. மேற்காணும் இரு பணியாளர்கள் மேற்படி பணி செய்வதால் இரண்டு பணியாளர்களுக்கு கூடுதல் ஊதியம் ஏதும் வழங்கப்படவில்லை. அவரவர்களுக்குரிய தூய்மைப் பணிக்கு மட்டுமே ஊதியம் வழங்கப்படுகிறது. இதில் நிதியிழப்பு என்ற கேள்வி எழவில்லை. மேலும், இப்பேரூராட்சியில், நிதியிழப்பு, முறைகேடுகள் குறித்து எதையும் குறிப்பிட்டு தெரிவிக்காமல் பொதுவாக புகார் தெரிவித்துள்ளார். இப்பேரூராட்சியில், 2022–23ம் ஆண்டு வரையில் உள்ளாட்சி நிதி

தணிக்கைகள் நடைபெற்று முடிவடைந்துள்ளது. நிதியிழப்பு மற்றும் முறைகேடுகள் ஏதும் தணிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் 18 மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் (தனியார் மயம்) பசுமை நண்பர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் சேர்த்து மொத்தம் 75 நபர்கள் ஆக மொத்தம் 93 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இதனால் துப்புரவுப் பணிகள் ஏதும் பாதிக்கப்படவில்லை.

இந்நிலையில் திரு. கோ. பரசுராமன் (புகார்தாரர்) இப்பேரூராட்சியில் 2004 முதல் கணினி இயக்குதல் பணிக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று (Contract basis) ஒப்பந்த அடிப்படை பணியாற்றிய நிலையில் 05/2022 முதல் எவ்வித தகவலும் இன்றி பணியிலிருந்து நின்றுவிட்டார். கணினி இயக்குதல் பணியானது முற்றிலும் ஒப்பந்த அடிப்படை என்பதால் வேறு நபர்கள் இப்பணியிடத்திற்கு உரிய வழிமுறைகளின்படி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னர் தனக்கு அப்பணியிடம் வழங்கக் கோரி திரு. கோ. பரசுராமன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.7841/2024ன் படி தொடர்ந்த வழக்கின்மீது 25/03/2024 உத்திரவின்படி, நடவடிக்கை மேற்கொண்டு திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 99/2022/அ1, நாள் 18.06.2024ல் இத்தனியர் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் மனுதாரர் கலந்து கொள்ளாததால் இவரை பணியில் சேர்த்துக் கொள்ள வழிவகையில்லை என புகார்தாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. எனவே, இப்புகார் மனு முற்றிலும் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், மனுதாரரை பணியில் சேர்க்கவில்லை என்பதாலும் உண்மைக்கு புறம்பாக புகார் தெரிவித்துள்ளார் என்ற விவரம் பணிந்து சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது. எனவே இப்புகாரிலிருந்து விடுவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலரும் 06.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.08.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. கோ. பரசுராமன் 06.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

"திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில், கடந்த 15 ஆண்டுகளாக நிரந்தர தூய்மைப் பணியாளர் பணியிடத்தில் அமர்த்தப்பட்ட திருமதி. ர. ராஜாம்பாள் மற்றும் திருமதி வ. தேவி ஆகியோர் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளாமல் இளநிலை உதவியாளர் செய்யும் பணிகளான கோப்புகளை கையாண்டு வருகின்றனர். இவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்குரிய சீருடை அணியாமல் அப்பணியின் வருகை நேரமான காலை 6 மணிக்கு வருகை புரியாமலும் அலுவலக நேரமான காலை 10 மணிக்கு வருகை புரிந்து வருகைப் பதிவேட்டில் பதிவு செய்கின்றனர். மேலும், இவர்கள் அலுவலகப் பணியினை திறம்பட செய்ய போதிய தகுதியின்றி இருப்பதால், பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு, தணிக்கைத்தடை எழுவதற்கு முக்கிய காரணமாக உள்ளனர். மேற்காணும் இரு தூய்மைப் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் செய்யும் பணிகளை பல்வேறு பதிவேடுகளை கையாளுவதால் இருவருக்கும் மாதம் ரூ.80,000 வீதம் பல இலட்சம் ரூபாய் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இவ்விரு தூய்மைப் பணியாளர்களும் அலுவலக கோப்புகளை தன்வசம் வைத்திருந்து சில கோப்புகளை காணாமல் போயிருப்பதாக அறிய வருகிறது.

மேலும், பேரூராட்சிகளின் இயக்குநர் வெளியிட்டுள்ள 05.07.2011 நாளிட்ட சுற்றறிக்கையில் தூய்மைப் பணியாளர்களை மாற்றுப் பணியில் பயன்படுத்தும் போது அவர்களை எக்காரணம் கொண்டும் அலுவலகத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது, துப்புரவு பணியாளர் சீருடையுடன் வருகை புரிதல் வேண்டும் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்குரிய வருகை நேரங்களின்படி வரவேண்டும் போன்ற பல்வேறு இயக்குநரின் அறிவுரைகளுக்கு மாறாக பணியமர்த்தப்பட்டுள்ளனர் இதற்கு காரணமான நகராட்சி ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 2021–22 மற்றும் 2022–23–ஆம் ஆண்டுகளுக்கான மீன் அங்காடி குத்தகை விடாமல், பேரூராட்சி மூலமாக வசூல் செய்யப்பட்டதால், தினசரி வசூல் தொகையினை வங்கியில் செலுத்தாமலும், பில் புத்தகங்கள் சரிவர பராமரிக்காமலும் தன்னிச்சையாக தூய்மைப் பணியாளர் திருமதி தேவி என்பவர் கையாண்டதன்மூலம் அரசுக்கு பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது இதனை எனது கூடுதல் புகாராக பதிவு செய்யுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரான திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் திருமதி. ந. லதா என்பவர் 06.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில், தலைமை எழுத்தாளர் – 1, இளநிலை உதவியாளர் – 2, வரித்தண்டலர் – 3, பதிவுரு எழுத்தர் – 1, தூய்மைப் பணியாளர்கள் – 21 ஆகிய பணியிடங்கள் நிரந்தரமாகும், இவற்றில் தலைமை எழுத்தர் (1), இளநிலை உதவியாளர் (2) மற்றும் வரித்தண்டலர் (2) ஆகிய 5 பணியிடங்கள் காலியாக இருப்பதால், நிர்வாகப் பணிகளில் கோப்புகளை தைப்பதற்கும், அடுக்கி வைக்கவும் இளநிலை உதவியாளருக்கும் மற்றும் வரித்தண்டலருக்கும் உதவியாக செயல் அலுவலரின் உத்தரவின் பேரில் அவ்வப்போது தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். மேலும், மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள இரு தூய்மைப் பணியாளர்கள், காலை 6 மணிக்கு வருகை புரிந்து, தூய்மைப்பணி முடித்தப்பின்னர் சுத்த நகல் எடுத்தல், கோப்புகள் தைத்தல் போன்ற பணிகள் மட்டும் செய்கின்றனர். இவர்கள் கோப்புகள் ஏதும் கையாளவில்லை. மேலும், பேரூராட்சியில் 2022–23–ஆம் ஆண்டு வரையில் உள்ளாட்சி நிதி தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, தணிக்கை தடை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், துப்புரவுப் பணியில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை, தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மட்டுமே ஒப்பளிப்பு செய்யப்பட்டு எவ்வித கூடுதல் ஊதியம் இருவருக்கும் வழங்கப்படவில்லை, இதனால் நிதியிழப்பு ஏதுமில்லை. ஆடுதொட்டிக்கான வசூல் கட்டணம் குறித்து எந்தவித முறைகேடோ, நிதி இழப்போ ஏற்படவில்லை. மேலும் இதுகுறித்து தணிக்கை தடை ஏதுமில்லை.

மேலும், மனுதாரர் திரு. கோ.பரசுராமன் என்பவர் 2021–22–ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குபவர் பணியிடத்தில் அமர்த்தப்பட்ட இவர், எவ்வித தகவல் இல்லாமல் பணிக்கு வராமல் நின்றுவிட்டார். இதன் பின்னர், பேரூராட்சியில், நடைபெற்ற கணினி இயக்குபவர் பணியிடத்திற்கு வருடாந்திர ஒப்புந்தப்புள்ளிகளில் மனுதாரர் கலந்து கொள்ளாததால் மேற்காணும் பணியில் அமர்த்தப்படவில்லை. எனவே உண்மைக்கு புறம்பாக காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இப்புகாரினை அளித்துள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மனுதாரர் விசாரணையில் தெரிவித்துள்ள கூடுதல் புகாரான 2021–22 மற்றும் 2022–23–ஆம் ஆண்டுகளுக்கான மீன் அங்காடி குத்தகை விவரம் குறித்து தனியாக ஒரு வார காலத்திற்குள் எனதறிக்கையினை சமர்ப்பிக்க அனுமதி அளிக்குமாறு இம் முறை மன்றத்தை கேட்டு கொள்கிறேன்.

மேலும், இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த எனது 09.08.2024 நாளிட்ட அறிக்கையில் உள்ள விவரங்களையும் மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டு கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. கோ. பரசுராமன் என்பவர் தனது 05.02.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தொவித்துள்ளார்.

(i) திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில் 2007 ஆம் ஆண்டு முதல் நிரந்தர தூய்மைப் பணியாளராக பணியாற்றி வரும் திருமதி ர. ராஜாம்பாள் மற்றும் திருமதி. வ. தேவி ஆகியோர் பேரூராட்சியில் தூய்மைப் பணியினை மேற்கொள்ளாமல், இளநிலை உதவியாளர் பணியாற்றுவது போல் பேரூராட்சியின் பல்வேறு கோப்புகளை கையாண்டு வருகின்றனர்.

(ii) தூய்மைப் பணியாளரின் சீருடையை அணியாமல் தூய்மைப் பணி கால நேரமான காலை 6 மணிக்கு வருகை புரியாமல் அலுவலக நேரமான காலை 10.00 மணிக்கே மேற்காணும் இருவரும் வருகை புரிகின்றனர்.

(iii) போதிய திறமையின்றி அலுவலக கோப்புகளை கையாளுவதால், பேரூராட்சியின் பொது நிதியில் பல்வேறு நிதியிழப்புகள் ஏற்படுத்தியுள்ளனர்.

(iv) ஆடு அடிக்கும் தொட்டிக்கு வருடாந்திர ஒப்பந்தம் இல்லாததால், தினசரி வசூல் செய்ததில் திருமதி வ. தேவி என்ற தூய்மைப் பணியாளர் கையாடல் செய்துள்ளதன் மூலம் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

(v) கோப்புகள் அனைத்தும் இவர்கள் வசம் இருப்பதால், இவர்களுக்கு ஆகாத செயல் அலுவலர் / பிற அலுவலர்களின் பணிக்காலங்களில் கோப்புகளை காணாமல் செய்துவிட்டு, தணிக்கை தடை எழுவதற்கு முக்கிய காரணமாக உள்ளனர்.

(vi) மேற்காணும் இரு தூய்மைப் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் செய்யும் பணிகளை மேற்கொள்வதால் இவர்களுக்கு கூடுதலாக மாதம் தலா ரூ.80,000/– வீதம் வழங்குவதால், பேரூராட்சிக்கு இந்நாள் வரை ரூபாய் ஒரு கோடிக்கு மேல் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

(vii) பேரூராட்சிகளின் இயக்குநரின் 05.07.2011 நாளிட்ட சுற்றறிக்கை ந.க. எண்.5441/2011/ஊ1–ல் வெளியிடப்பட்ட பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களை மாற்றுப் பணிக்கு பயன்படுத்தும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய அறிவுரைகளுக்கு எதிராக பேரூராட்சி செயல் அலுவலர் செயல்பட்டுள்ளார்.

(viii) 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளுக்கான மீன் அங்காடியை குத்தகைக்கு விடாமல், தினசரி வசூல் செய்யப்பட்டதன் மூலம் தூய்மைப் பணியாளர் திருமதி தேவி என்பவர் வசூலான தொகைக்கு பில்

புத்தகங்கள் பராமரிக்காமலும் இருந்ததால், அரசுக்கு பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்காணும் குற்றச்சாட்டுகளுக்கு காரணமான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரரின் மேற்காணும் புகார்கள் குறித்து, திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையிலும் மறறும் வாக்கு மூலத்திலும் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளதை ஆவணங்களின மூலம் தெரிய வருகிறது.

(i) திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சியில், 1 தலைமை எழுத்தாளர், 2 இளநிலை உதவியாளர் மற்றும் 2 வரித்தண்டலர் ஆகிய 5 பணியிடங்கள் காலியாக இருப்பதால், புகாராக தெரிவிக்கும் இரு தூய்மைப் பணியாளர்கள் தங்களது தூய்மைப் பணிகளை முடித்த பின்னர், நிர்வாகப் பணிகளில் கோப்புகளை தைப்பதற்கும், அடுக்கி வைக்கவும் மற்றும் சுத்த நகல் எடுப்பதற்கும் இளநிலை உதவியாளருக்கும் மற்றும் வரித்தண்டலருக்கும் உதவியாக செயல் அலுவலரின் உத்தரவின் பேரில் அவ்வப்போது உதவி புரிகின்றனர்.

மேற்காணும் காலியாகவுள்ள 5 பணியிடங்களை உடனடியாக நிரப்பிடக் கோரி திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் ந.க.எண்.141/2024 நாள் 20.08.2024ல் உரிய கருத்துரு காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளதை ஆவணத்தின் வாயிலாக தெரியவருகிறது.

(ii) புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள இரு தூய்மைப் பணியாளர்களும் தூய்மைப் பணியாளர்களுக்கான சீருடையுடன் காலை 6 மணிக்கே வருகை புரிகின்றனர் என்பதை பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட உரிய புகைப்படங்கள் மற்றும் வருகை பதிவேடு மூலம் தெரிய வருகிறது.

(iii) இரு தூய்மைப் பணியாளர்களும் கோப்புகளை கையாளவில்லை என்றும், கோப்புகளை தைத்தல், அடுக்கி வைத்தல் போன்றவற்றிற்கு மட்டும் உதவி புரிந்துள்ளனர். 2022–23 ஆம் ஆண்டு வரை தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிதியிழப்பு என எவ்வித தணிக்கை தடையும் எழவில்லை.

(iv) ஆடு அடிக்கும் தொட்டி இனத்திற்கான குத்தகையானது முறையாக ஏலம் விடப்பட்டு, பேரூராட்சி மன்ற தீர்மானப்படி உயர்ந்த ஏலத் தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு கீழ்க்காணுமாறு வசூலிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | குத்தகை ஆண்டு | உயர்ந்த தொகை கோரிய ஒப்பந்ததாரர் | பேரூராட்சி மன்ற தீர்மானம் | வசூல் செய்யப்பட்ட தொகை | நிதியிழப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 2020–21 | திரு. எம். கார்த்திகேயன் (ரூ. 1,15,000/–) | தீர்மான எண். 21/2020 நாள் 26.03.2020 | ரூ. 1,15,000/– | இல்லை |
| 2. | 2021–22 | திரு. எம். கார்த்திகேயன் (ரூ. 1,20,750/–) (5% உயர்த்தி) | | ரூ. 1,20,750/– | – |
| 3. | 2022–23 முதல் 2024–25 (3 ஆண்டுகள்) | திரு. அஷரப் அலி (ரூ. 1,75,000/–) | தீர்மான எண். 28/2022 நாள 13.4.2022 | ரூ. 1,75,000/– | இல்லை |

எனவே, ஆடு அடிக்கும் தொட்டி இனத்திற்கு ஏலம்விடப்பட்டதில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

(v) தூய்மைப் பணியாளர்கள் அலுவலகக் கோப்புகளை கையாளவில்லை. இது குறித்து தணிக்கை அறிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழவில்லை.

(vi) புகாராக தெரிவிக்கும் இரு தூய்மைப் பணியாளர்களுக்கும் தூய்மைப் பணியாளருக்குரிய ஊதியம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. புகாராக தெரிவிப்பது போல் எவ்வித கூடுதல் ஊதியமும் வழங்கப்படவில்லை. இதனை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த பேரூராட்சி பணியாளர்களின் ஜனவரி 2024 முதல் ஆகஸ்டு 2024 வரையிலான ஊதியம் வழங்கப்பட்ட சம்பள விபரப்பட்டியல் மூலம் அறிய முடிகிறது.

(vii) மீன் அங்காடி இனத்திற்கு குத்தகைவிடப்பட்டதில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண். | குத்தகை ஆண்டு | அதிக ஏலத் தொகை கோரியவர் | பேரூராட்சி மன்ற தீர்மானம் | வசூல் செய்யப்பட்ட தொகை | நிதியிழப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 2019–20 முதல் 2021–22 (3 ஆண்டுகள்) | திரு. எம். கே. தினேஷ் | தீர்மான எண். 33, நாள் 30.5.2019 | ரூ. 6,15,000/– | இல்லை |
| | (திரு. தினேஷ் என்பவர் 2019–20 மற்றும் 2020–21 ஆண்டு வரை 2 ஆண்டுகளுக்கு மட்டும் குத்தகைக்கு எடுத்தவர் கொரோனா தடைக்காலத்தினால் 2021–22 ஆம் ஆண்டிற்கு ஏலம் வேண்டாம் என 4.1.2021 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே 2021–22 ஆம் ஆண்டு பேரூராட்சி அலுவலக வசூல் பணியாளர் மூலம் மீன் விற்பனை செய்யும் வணிகர்களிடம் வசூல் செய்யப்பட்டு பேரூராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. இதில் பொது மக்களின் மூலம் எவ்வித புகாரும் பெறப்படவில்லை. எனவே இதில் நிதியிழப்பு இல்லை.) | | | | |
| 2. | 2022–23 முதல் 2024–25 (3 ஆண்டுகள்) | திருமதி. வனஜா வேதகிரீஸ்வரர் மீன் விற்பனையாளர் நலச் சங்கம் | தீர்மான எண். 12/2022 நாள் 17.06.2022 | ரூ. 5,00,000/– (வருடத்திற்கு) | முழுத் தொகையும் வசூலிக்கப் பட்டது நிதியிழப்பு இல்லை |

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளுக்கான மீன் அங்காடியை குத்தகைக்கு விடப்படாமல், பேரூராட்சி மூலமாக தினசரி வசூல் செய்யப்பட்டதால் முறைகேடுகள் நடைபெற்று, பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ள புகாருக்கு, திருக்கழுக்குன்றம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், 2021–22 ஆம் ஆண்டில் கொரோனா நோய் தொற்றுக் காரணமாக குத்தகைதாரர் திரு. தினேஷ் என்பவர் 2021–22 ஆம் ஆண்டிற்கு தன்னால் ஏலம் நடத்த முடியவில்லை என தெரிவித்ததின் அடிப்படையில் பேரூராட்சி பணியாளர் மூலம் தினசரி வசூல் செய்யப்பட்டது எனவும், இதில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மேற்காணும் சூழ்நிலையில், திருக்கழுக்குன்றம் முதல்நிலை பேரூராட்சியில் 2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில் மீன் அங்காடி மூலம் பேரூராட்சியால் வசூலிக்கப்பட்ட தொகை மூலம் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து, அதன் அறிக்கையை 3 மாதக் காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் பேரூராட்சியின் தூய்மைப் பணியாளர்களை மாற்றுப் பணிகளில் பயன்படுத்தும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரால் வெளியிடப்பட்டுள்ள 05.07.2011 நாளிடப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி பொது மக்களிடமிருந்து

எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வண்ணம் செயல்பட வேண்டும் என திருக்கழுக்குன்றம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இறுதியாக, திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சியில் காலியாகவுள்ள தலைமை எழுத்தர் பணியிடம் உட்பட 5 பணியிடங்களை உடனடியாக நிரப்பிட துரித நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. கோ. பரசுராமன்,
   ப.எண். 2/226ஏ, பு. எண். 3/99,
   காந்தி தெரு , பாரதி நகர்,
   மேட்டுத்தண்டலம், திருப்போரூர்,
   செங்கல்பட்டு மாவட்டம் – 603 110.

2. செயல் அலுவலர்,
   திருக்கழுக்குன்றம் முதல் நிலை பேரூராட்சி,
   செங்கல்பட்டு மாவட்டம்.

3. இயக்குநர்,
   உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை,
   571, அண்ணா சாலை, நந்தனம், சென்னை – 600 035.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

5. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)